2nd copy. சிவலிங்கம்பற்றிய ஒரு சிறுகதை.   சொல்லியவர்
N. சுந்தரலிங்கம்.
தொகுப்பாளர்.

ஆதிகாலத்தில் சிவபெருமான் (ஈஸ்வரன்) காமவெறி கொண்டு தாருகா வனத்தில் உள்ள ரிஷிபத்தினிகளையெல்லாம் கற்பழிக்கத் தொடங்கினார். அப்போது அங்குள்ள ரிஷிகள் எல்லாம் ஈஸ்வரன் செய்யும் காமலீலைகளைக் கண்டு கோபமுற்று எல்லா ரிஷிகளும் ஒன்று கூடி ஒரு பெரிய யாகம் வளர்த்தினார்கள். அந்த யாகத்தில் ஒரு மானை உண்டாக்கி சிவபெருமானைக் கொன்று விட்டு வருமாறு அனுப்பினார்கள். யாகத்தினில் உண்டான மான் வருவதை சிவபெருமான் கண்டு அதைப்பிடித்து அடித்துக்கொன்று அதன் தோலை ~~உரி~~ உரித்து தன் மேல் ஆடையாகப் போட்டுக்கொண்டார். இதையெல்லாம் ரிஷிகள் ஞானக் கண்ணில் பார்த்து மேலும் கோபமுற்று யாகம் வளர்க்கும்போது ஈ யாகத்தின் வாயிலாக மழு என்ற ஆயுதம் புறப்பட்டு வந்தது. அதைக் கண்ட முனிவர்கள் சிவபெருமானை வெட்டி யெறிந்துவிட்டு வருமாறு மழுவை சிவபெருமான் மேல் ஏவினார்கள்.  ← மழு வருவதை சிவபெருமான் கண்டு அதை தன்னுடைய கையால்பிடித்து அடக்கி அதை தன்னிடமே வைத்துக் கொண்டார். இவைகளையெல்லாம் கண்ட ரிஷிகள் மேலும் கோபமுற்று யாகத்தின் வாயிலாக ஒரு புலியை உண்டாக்கி அதை சிவபெருமானிடம் அனுப்பினார்கள் அவரைக் கொன்று விட்டு வருமாறு. புலிவருவதை சிவபெருமான் கண்டு, அதைப்பிடித்து அடித்துக் கொன்று அதன் தோலையுரித்து ஆசனமாகப் போட்டுக் கொண்டார்.

இவைகளில் எல்லாம் தோல்வியுற்ற ரிஷிகள் அளவில்லாத கோபமடைந்து, கண்கள் தீப்பொறி பறக்க தங்கள் உடம்பில் இருக்கும் ரத்தத்தை யெடுத்து யாகத்தில் ஊற்றினார்கள். அப்போது அந்த யாகத்தில் ஒரு வீரவாள் உருவெடுத்து வந்தது. அந்த வாளை ரிஷிகள் கையில் பிடித்து சிவபெருமானின் ஆண் குறியை துண்டாக அறுத்து எறிந்துவிட்டுவா என்று வாளை சிவபெருமான் மேல் ஏவினார்கள்.  ← வாள் வருவதை சிவபெருமான் கண்டு அதனை அடக்க முயன்றார். ஆனால், அந்த வாளை அவர் அடக்கமுடிய வில்லை. அடக்கப்படாத வாள் உடனே சிவபெருமானின் ஆண்குறி யை அறுத்து அந்தரத்தில் விட்டு விட்டது. அறுபட்ட சிவபெருமானி ன் ஆண் குறி ஈரேழு பதினாலு லோகமும் நடுங்கவும், ஆகாயம், பூமி இவைகள் எல்லாம் நடுங்கவும் தீப்பொறி பறக்க ஆங்காரமாக பூமியை நோக்கி கீழேவந்து கொண்டிருந்தது. இதைக் கண்ட தேவர்கள் எல்லாம் "அது பூமியில் விழுந்தால் என்ன ஆகுமோ?" என்று பயந்து நடுங்கினார்கள். அப்போது பிர்மா, விஷ்ணு இருவரும் அதைக்கண்டு "இவ்வளவு ஆங்காரத்துடன் கீழேவரும் சிவபெருமானி ன் ஆண் குறியை பூமியில் வந்து விழுவதற்குள் எப்படியாவது அதை

அமைதி கொள்ளச் செய்ய வேண்டும் இல்லாவிட்டால் இந்த உலகமே அழிந்துவிடும்" என்று யோசித்து பிர்மாவானவர் கீழே உட்கார்ந்து ஒரு சதுரமான கல்லைப்போல் வடிவு கொண்டார். அதன்மேல் விஷ்ணுவானவர் பெண் உறுப்புப்போல் (யோனிபோல்) ~~வடிவு~~ நடுவில் துவாரத்துடன் வடிவு கொண்டு அமர்ந்தார். அப்போது, ஆகாயத்திலிருந்து ஆங்காரத்துடன் வந்த சிவபெருமானின் ஆண் குறியானது பெண் உறுப்புப்போல் வடிவத்துடன் இருக்கும் விஷ்ணுமேல் விழுந்து நின்று கொண்டது. அமைதியடைந்தது. இதை ஒரு குறிப்பாக வைத்துத்தான் சிவபெருமான் இன்றும் மக்களுக்கு சிவலிங்கமாகவே காட்சியளிக்கிறார்.

மேலும், பிர்மா, விஷ்ணு சிவன் ஆகிய மூவரும் சேர்ந்து சிவலிங்கமாக ~~உருவம்~~ உருவெடுத்ததால் சிவலிங்கத்தை தரிசிப்பவர்களுக்கு மூன்று கடவுள்களையும் ஒரே இடத்தில் தரிசிப்பது போன்ற உணர்வு ஏற்படும்.




16/8/06